DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
STC.No.172/2025
Prosecution witness – P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ராமமூர்த்தி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)
**25.05.2026- 03.40 PM**
<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கமுதி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் இறுதி கட்ட விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த கமுதி காவல் நிலையித்தில் பணியாற்றிய சார்பு ஆய்வாளர் திரு.சக்திவேல் கணேஷ் என்பவர் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்.

2. சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சக்திவேல் கணேஷ் என்பவர் கடந்த 02.06.2025ம் தேதியன்று 13.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.121/2025 BNS பிரிவுகள் 296(b), 115(2)-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **புகார் மனு அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் அன்றேய தினமே 11.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரமேஷ் மற்றும் தவசி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சம்பவ சாட்சிகளான பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி நிலையத்தில்

தோன்றி சட்டப்பிரிவு 35(3) and (4) அழைப்பாணையின் மூலம் பிணையத்தில் சென்றுள்ளார்.

4. பின்னர் அத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து அன்றே எதிரி மீது BNS பிரிவுகள் 296(b), 115(2)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் சொல்வது போல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. அ.சா.1 அளித்த பொய்யான புகார் மனுவைப் பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:46:21 +0530